Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# காப்பியங்களில் அரங்கம், ஒப்பனை, பற்றிய குறிப்புகள்

## (சிலப்பதிகாரம் & சீவக சிந்தாமணி)

2

முனைவர் நீலகேசி .ஜெ .
19, MRC நகர் பிரதான சாலை
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028
jneelakesi@yahoo.com

**ஆய்வுச் சுருக்கம்:**

சிலப்பதிகாரம் மற்றும் சீவக சிந்தாமணி எனும் தமிழ்க் காப்பியங்களில் அரங்கம் மற்றும் ஒப்பனை பற்றிய குறிப்புகள் காணக் கிடைக்கின்றன. சிலப்பதிகாரத்தில் அரங்கேற்று காதையிலும், சீவக சிந்தாமணியில் காந்தருவதத்தையார் இலம்பகத்திலும், இலக்கணையார் இலம்பகத்திலும், 'எழினி' என வழங்கப் பெறும் திரைச் சீலைகளின் வகைகள், 'தொய்யில்' எனும் மேனியில் எழுதப் பெறும் ஓவியங்கள், புருவம் ஒதுக்குதல், பற்றிய செய்திகள் தெரிய வருகின்றன.

**திறவுச் சொற்கள்:**

எழினி, தொய்யில், வெள்ளை சந்தனம், தொய்யில், புருவம் ஒதுக்குதல்

**முன்னுரை**

சிலப்பதிகாரத்திலும், சீவக சிந்தாமணியிலும், அரங்கம் மற்றும் ஒப்பனை பற்றிய குறிப்புகள் கிடைக்கப் பெறும் செய்திகள் இலக்கிய ஆர்வலருக்கு வியப்பைத் தருவதாக உள்ளன.

**சிலப்பதிகாரம்:**

சிலப்பதிகாரத்தில் அரங்கம், ஒப்பனை, பற்றிய குறிப்புகள் பின் வருமாறு:

**நாட்டிய அரங்கின் அமைப்பு:**

சிற்ப நூலாசிரியர் வகுத்த நெறியில் பிறழாமல் அரங்கத்திற்கான ஓர் இடத்தைத் தேர்வு செய்து பின் பொதிய மலை முதலான மலைகளில் ஒரு கணுவிற்கும் மாரு கணுவிற்கும் இடையே ஒரு சாண் இடைவெளியுடன் ஓங்கி வளர்ந்த மூங்கில்களை வெட்டிக் கொணர்ந்து நூல்முறைப்படி உத்தமனின் கைப்பெருவிரல் அளவில் இருபது நான்கு மடங்கு கொண்டதாக மூங்கிலைத் துண்டு செய்து அதனை அரங்கம் அளக்கும் அளவுகோலாகக் கொண்டு, ஏழு கோல் அகலம், எட்டுக் கோல் நீளம், ஒரு கோல் உயரம், எனும் அளவில் அரங்கம் அமைத்தனர். தூண்கள் மீது உள்ள உத்தர பலகைக்கு அரங்கில் இட்ட பலகைக்கும் இடையே உயரம் நான்கு கோல் அளவினதாகும். அனைவரும் வணங்க நால்வகை வருண பூதத்தை வரைந்து மேல் நிலத்தே வைத்து தூண்களின் நிழல் அரங்கில் விழாத வண்ணம் நிலை விளக்குகளைத் தக்க இடங்களில் வைத்தனர்.

உருவு திரையாக ஒரு முக எழினியையும் பொருமுக எழினியையும் கரந்து வரல் எழினியையும் ஓவியத்துடன் கூடிய மேல்விதானத்தையும் அமைத்தனர். ஆங்காங்கே முத்துமாலைகளைத் தொங்க விட்டு அரங்கத்திற்கு அழகு கூட்டினர். இங்ஙனமாக ரசனையுடன் கூடிய அழகு மிளிரும் வகையில் அரங்கைச் சமைத்தனர்.

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

**"எண்ணிய நூலோர் இயல்பினின் வழா அது,**
**மண்ணகம் ஒருவழி வகுத்தனர் கொண்டு**
**புண்ணிய நெடு வரைப் போகிய நெடுங் கழைக்**
**கண்ணிடை ஒரு சாண் வளர்ந்தது கொண்டு,**
**நூல் நெறி மரபின் அரங்கம் அளக்கும்**
**கோல் அளவு இருபத்து நால் விரல் ஆக,**
**எழு கோல் அகலத்து, எண் கோல் நீளத்து,**
**ஒரு கோல் உயரத்து,உறுப்பினது ஆகி,**
**உத்தரப் பலகையோடு அரங்கின் பலகை**
**வைத்த இடை நிலம் நால் கோல் ஆக,**
**ஏற்ற வாயில் இரண்டுடன் பொலிய,**
**தோற்றிய அரங்கில் - தொழுதனர் ஏத்த;**
**பூதரை எழுதி, மேல் நிலை வைத்து;**
**தூண் நிழல் புறப்பட, மாண் விளக்கு எடுத்து; ஆங்கு,**
**ஒரு முக எழினியும், பொரு முக எழினியும்,**
**கரந்து வரல் எழினியும், புரிந்துடன் வகுத்து - ஆங்கு;**
**ஓவிய விதானத்து, உரை பெறு நித்திலத்து**
**மாலைத் தாமம் வளையுடன் நாற்றி;"**

**-95-112 வரிகள், புகார்க் காண்டம், அரங்கேற்று காதை, சிலப்பதிகாரம்**

**தொய்யில்:**

தற்போதைய இளைஞர்கள் தம் உடலில் பெரும் அளவில் பச்சைக் குத்திக் கொள்வது போன்றும், பெண்கள் தம் உடலில் கைகளிலும், முதுகிலும், கால்களிலும், மருதாணிப் பொடியால் பல வித ஓவியங்களை இட்டு அலங்காரம் செய்வது போன்றும், அக்காலத்தில் தொய்யில் வரைந்து கொள்வது வழக்கத்தில் இருந்துள்ளது தெரிய வருகிறது.

**"நறு மலர்க் கோதை! நின் நலம் பாராட்டுநர்**
**மறு இல் மங்கல அணியே அன்றியும்,**
**பிறிது அணி அணியப் பெற்றதை எவன்கொல்?**
**பல் இருங் கூந்தல் சில் மலர் அன்றியும்,**
**எல் அவிழ் மாலையொடு என் உற்றனர்கொல்?**
**நான நல் அகில் நறும் புகை அன்றியும்,**
**மான் மதச் சாந்தொடு வந்ததை எவன்கொல்?**
**திரு முலைத் தடத்திடைத் தொய்யில் அன்றியும்,**
**ஒரு காழ் முத்தமொடு உற்றதை எவன்கொல்?**
**திங்கள் முத்து அரும்பவும், சிறுகு இடை வருந்தவும்**
**இங்கு இவை அணிந்தனர்; என் உற்றனர்கொல்?"**

**-62-70 வரிகள்**

**, புகார்க் காண்டம், மனையறம்படுத்த காதை, சிலப்பதிகாரம்**

கண்ணகியிடம் இயற்கையாகவே அழகு நிறைந்திருக்க, அழகு படுத்தும் மகளிர் பூட்டும் அணிகளால் கண்ணகி அடைந்த பயன் யாது என்றும், அவளின் கருங்கூந்தலில் மங்கலமாக சில மலர்களைச் சூட்டாது ஒளிமிக்க இதழ் விரிந்த மலர் மாலையை சூட்டுவதும், கூந்தலுக்கு அகிற்புகையுடன் கஸ்தூரிச் சாந்தையும் ஊட்டுவதும், அழகிய முலைத் தடத்தின் மீது தொய்யில் எழுதியதுடன் ஒரு முத்துவட மாலையைச் சூட்டியதும் ஏன் என்றும் கோவலன் கண்ணகியின் அழகை வியப்பதாக காப்பிய வரிகள் விவரிக்கின்றன. இவ்வரிகள் ஒப்பனை பற்றியும் தொய்யில் பற்றியும் நன்கு விளக்குகின்றன.

**“உருவிலாளன் ஒரு பெரும் சேனை**
**இகல் அமர் ஆட்டி, எதிர் நின்று விலக்கி, அவர்**
**எழுது வரிக் கோலம் முழு மெயும் உறீஇ,**
**விருந்தொடு புக்க பெரும் தோள் கணவரொடு-**
**உடன் உறைவு மரீஇ, ஒழுக்கொடு புணர்ந்த,**
**வடமீன் கற்பின், மனை உறை மகளிர்... “**

**-224 - 229 வரிகள், இந்திரவிழவு ஊர் எடுத்த காதை, சிலப்பதிகாரம்**

‘உருவமற்ற (அநங்கன்) மன்மதனுடைய ஒப்பற்ற பெரிய படையாகிய பரத்தையரது ஊடலாகிய போரை, அவரைப் புகழ்ந்து சொல்லி வென்று, அவர் போகாமல் எதிர் நின்று தடுத்துப் புணர்ந்ததால், பரத்தையருடைய மார்பிலும் தோளிலும் எழுதிய தொய்யில் தமது மார்பு முழுதும் உறுதலால் அக்கோலத்தோடு தம் மனைவியைக் காண அஞ்சி தம் விருந்தினரோடு புகுந்த பெரிய தோளையுடைய கணவரோடு கூடிப் புணர்ந்த அருந்ததி போன்ற கற்பை உடைய இல்லற மகளிர்...’ என்பதில் பரத்தையர் தம் மார்பில் தொய்யில் எழுதி அழகு படுத்திக் கொண்டனர் என அறிய வருகிறது.

(எழுது வரிக் கோலம் - தொய்யில்)

**“பண் கனி பாடலும், பரந்தன, ஒருசார்;**
**மான்மதச் சாந்தும், வரி வெண் சாந்தும்,**
**கூனும் குறளும், கொண்டன, ஒருசார்;**
**வண்ணமும் சுண்ணமும், மலர்ப் பூம் பிணையலும்,**
**பெண் அணிப் பேடியர் ஏந்தினர், ஒருசார்;**
**பூவும், புகையும், மேவிய விரையும்,**
**தூவி அம் சேக்கை சூழ்ந்தன, ஒருசார்;**
**ஆடியும், ஆடையும், அணிதரு கலன்களும்,**
**சேடியர் செல்வியின் ஏந்தினர், ஒருசார்...”**

**-56 - 64 வரிகள் நடுகல் காதை வஞ்சிக் காண்டம் சிலப்பதிகாரம்**

சேரநாட்டு அரசியான கோப்பெருந்தேவி தம் மாளிகையின் நிலாமுற்றத்திற்கு வரும் போது ஒரு பக்கம் இனிய பாடல்கள் இசைக்கப் பட, ஒரு பக்கம் கஸ்தூரிக் குழம்பும், தொய்யில் எழுதும் வெள்ளிய சந்தன

மும், ஏந்தி கூனரும் குள்ளரும் நிற்க, ஒரு பக்கம் வண்ணங்களையும், சுண்ணங்களையும், மலர்மாலைகளையும், பெண்தன்மை மிக்க பேடியர் சுமந்து நிற்க, பூக்களும், நறுமணப்பொருள்களும், வாசனையும். அந்நாத் தூவியால் அமைந்த படுக்கையை ஒரு புறம் சூழ்ந்திருக்க, ஒப்பனைக்கான கண்ணாடியும், ஆடையும், அணிகலன்களும், பணிப்பெண்கள் ஏந்தி நின்றதாக வர்ணனை செல்கிறது.

(வரி வெண் சாந்து - தொய்யில் எழுதும் வெள்ளிய சந்தனம்)

***சீவக சிந்தாமணி:***

சீவக சிந்தாமணியில் அரங்கம், ஒப்பனை, பற்றிய குறிப்புகள் பின் வருமாறு:

**"கடி அரங்கு அணிந்து மூதூர்க் கடல் கிளர்ந்தது அனையது ஒப்ப**
**நடை அறி புலவர் ஈண்டி நாடகம் நயந்து காண்பான்**
**குடை உடையவனொடு எண்ணிச் சீவகன் கொணர்மின் என்னத்**
**தொடையல் சூழ் வேலினானும் தோழரும் காணச் சென்றார்"**

**-672, காந்தருவத்தையார் இலம்பகம்,** ***சீவக சிந்தாமணி***

அழகிய அரங்கம் அமைத்து மூதூராகிய இராஜமாபுரத்தில் கடல் தளர்ந்து எழுந்தாற்ப் போல் நாடக நெறி அறிந்த புலவோர் ஒன்று கூடி, நாடகம் ஒன்றை விரும்பிக் காண அரசனோடு கலந்து பேசி, சீவகனை அழைத்து வருமாறு கூற, மாலை சூழ்ந்த வேலை உடைய சீவகனும், அவனது தோழரும், அங்கு சென்றனர்.

**ஒப்பனைக்கலை (பெண்கள்):**

**"நிலம்அறிந்துஅணிகஜயன்சீவகன்நெறியின்என்ன**
**நல்நுதல்பட்டம்கட்டிநகைமுடிக்கோதைசூட்டி**
**அலர்முலைக்குருதிச்சாந்தும்ஆரமும்பூணும்சேர்த்திக்**
**குலவியகுருதிப்பட்டின்கலைநலம்கொளுத்திஇட்டான்"**

**-673, காந்தருவத்தையார் இலம்பகம்,** ***சீவக சிந்தாமணி***

சீவகனிடம், அரங்கின் தன்மை அறிந்து, நூல் நெறிப்படி அரங்கில் ஆடவந்த அரிவைக்கு ஒப்பனை செய்யுமாறு, நாடக இலக்கணம் அறிந்த புலவர்கள் கூறினர்; அதனால் சீவகனும் அனங்கமாலையின் நெற்றியில் பட்டத்தைச் சூட்டி, தலைமுடி மீது பூச்சரத்தைச் சூட்டி, மார்பின் மீது செஞ்சாந்து தடவி, ஆரங்களையும், அணிகலன்களையும் அணிவித்து, செம்பட்டினை அவளது உடலோடு சேர்த்துக் கட்டி அழகு சிறக்கச் செய்தான்.

**"திருவிலே சொரிந்து மின்னும் குண்டலம் செம் பொன் ஓலை**
**உருவு கொள் மதியம் அன்ன ஒளி முகம் சுடர ஆக்கிப்**
**பரி அகம் சிலம்பு செம் பொன் கிண்கிணி பாதம் சேர்த்தி**
**அரிவையை அரம்பை நாண அணிந்தனன் அனங்கன் அன்னான்"**

**- 674, காந்தருவத்தையார் இலம்பகம்,** ***சீவக சிந்தாமணி***

வானவில் போல ஒளியில் மின்னும் குண்டலங்களையும், பொன் ஓலைகளையும், அழகு நிலாப் போன்ற முகம் மேலும் விளங்குமாறு அணிவித்து, காற்சிலம்பு, கிண்கிணி, ஆகியவற்றைப் பாதங்களில் அணிவித்து, அரம்பையும் நாணுமாறு அனங்கமாலைக்கு சீவகன் ஒப்பனை செய்ததாக இப்பாடலிலிருந்து அறியலாம்.

**ஒப்பனைக்கலை (ஆண்கள்):**

சீவகன் பெண்களுக்கு ஒப்பனை செய்வதில் மட்டுமல்லாமல், தனக்கு ஒப்பனை செய்து கொள்வதிலும் வல்லவனாகத் திகழ்ந்தது கீழ் வரும் பாடல்களில் தெள்ளத் தெளிவாக உள்ளது.

**"கரு நெறி பயின்ற குஞ்சிக் காழ் அகில் கமழ ஊட்டி**
**வரி நிற வண்ண மாலை வலம் பட மிலைச்சி வாள் ஆர்**
**திரு நிற முகத்திற்கு ஏற்பச் செம் பொன் ஓர் ஓலை சேர்த்தி**
**எரி நிறக் குழை ஓர் காதிற்கு இருள் அறச் சுடர வைத்தான்"**

**- 696, காந்தருவத்தையார் இலம்பகம்,  *சீவக சிந்தாமணி***

கருமையான வாசனை நெய் பெய்து, பழகிய கூந்தலிலே அகிற்புகை மணம் பெற ஊட்டி, வண்டுகள் பண்ணிசைக்கும் வண்ணமலர் மாலையைக் கூந்தலில் சூடி, ஒளி பொருந்திய அழகிய முகத்திற்கேற்ப செம்பொன்னால் ஆன ஓர் ஓலையை காதில் அணிந்து, செந்தீ நிறம் கொண்ட மகரக்குழையை இருள் நீங்க ஒளி விளங்க அணிந்து கொண்டான்.

**"தென் வரைப் பொதியில் தந்த சந்தனத் தேய்வை தேம் கொள்**
**மன் வரை அகலத்து அப்பி வலம்புரி ஆரம் தாங்கி**
**மின் விரித்து அன்னயது ஒத்து விலை வரம்பு அறியல் ஆகா**
**இன் நுரைக் கலிங்கம் ஏற்ப மருங்குலுக்கு எழுதி வைத்தான்"**

**- 697, காந்தருவத்தையார் இலம்பகம்,  *சீவக சிந்தாமணி***

தமிழ்நாட்டின் தெற்கில் அமைந்த பொதிகை மலைச் சந்தனக் குழம்பைத் தேனென இனிமை கொண்ட மலை போன்ற மார்பில் தடவி, வலம்புரிச் சங்கு ஈன்ற முத்துக்களால் ஆன மாலை அணிந்து, அகல விரித்த விலைமதிப்பற்ற இனிய பால் நுரை போன்ற ஆடையை இடையில் உடுத்திக்கொண்டான்.

மொத்தத்தில் சீவகன் அழகு தெய்வமாகிய முருகனைப் போன்று காட்சியளித்தான்.

**தொய்யில்:**

**"சேல் உண் கண்ணியர் சிலம்பொடு திலகமும் திருத்தி**
**மாலை நல்லன மதுக் கமழ் தகையன மிலைச்சிக்**
**கோல மென்முலைக் குங்குமம் இடு கொடி எழுதிச்**
**சோலை வேய் மருள்தோள் முத்தும் தொழு தக அணிந்தார்"**

**-2383, இலக்கணையார் இலம்பகம், சீவக சிந்தாமணி**

**மணவினை முன்னிட்டு முரசறைவோர் நகர மாந்தர் ஆகியோரின் அலங்காரங்கள்:**

சீவகன் - இலக்கணை இருவரின் மணவினைக்கான மக்கள் மேற்கொள்ள வேண்டிய ஆயத்தங்கள் பற்றி அறிவிப்பதற்காக முரசறைவோர், அழகிய வெள்ளை ஆடை உடுத்தி, சந்தனத்தை மேனியில் பூசி, சிறிய துளை உடைய காதுகளில் மஞ்சிகை எனும் காதணி பூட்டி மலைகளை சூடி, முத்துச் சரம் அணிந்து யானையின் மீது முரசை ஏற்றினர். முரசறைவோரே இவ்வாறு தங்களை அலங்கரித்துக் கொண்டனர்.

**"விளங்கு வெண் துகில் உடுத்து வெண் சாந்து மெய் பூசித்**
**துளங்கு மஞ்சிகை துளைச் சிறு காதினுள் துளங்க**
**வளம் கொள் மாலைகள் சூடி முத்து அணிந்து வண் முரசம்**
களம்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

**கொள் வேழத்தின் ஏற்றினர் கடி முரசு அறைவான்"**

**-2388, இலக்கணையார் இலம்பகம், சீவக சிந்தாமணி**

அனைவரும் முத்து மாலைகளையும், மணிவடங்களையும் அணிந்து, சந்தனம் பூசி, நெற்றியில் சுட்டியைச் சூடி, மின்னலைப் போன்ற நுண்ணிய இடை வருந்தினாலும் விலைமதிப்பற்ற வண்ணப் பட்டாடைகளை உடுத்திக் கொள்ளுமாறு, மன்னவனின் திருமொழியாகத் தான் கூறும் இனிய மொழியைக் கேட்குமாறு முரசறைவோர் அறிவித்தனர்.

**"கேள்மின் கேள்மின்கள் யாவரும் இனியன கேள்மின்**
**பூண்மின் நித்தில மணி வடம் பூசுமின் சாந்தம்**
**வாள் மின் நுண் இடை வருந்தினும் சூட்டு அணிந்து அழகு ஆர்**
**ஆணம் ஆகிய அருவிலை வண்ணப் பட்டு உடுமின்"**

**-2389, இலக்கணையார் இலம்பகம், சீவக சிந்தாமணி**

மூன்றாம் பிறை போன்ற சிறு நுதலில் பெரிய பட்டத்தைக் கட்டி, உடல் எங்கும் ஒளி சிந்தும் அணிகளால் அலங்கரித்துக் கொள்ளுமாறு வேந்தனின் அருள்மொழியாகக் முரசை அறைந்து கூறினர்.

**"பிள்ளை வெண் பிறைச் சிறு நுதல் பெரும் பட்டம் அணிமின்**
**உள்ள மேனியும் ஒளிர் மணிக் கலங்களின் புனைமின்…"**

**-2390, இலக்கணையார் இலம்பகம், சீவக சிந்தாமணி**

இவ்வாறு முரசறைவோர் உள்ளிட்ட நகர மாந்தரின் ஆடை அணி அலங்காரங்களைச் சிந்தாமணி எடுத்துரைக்கின்றது.

**புருவம் ஒதுக்குதல் (சீவகனுக்கும் மகளிருக்கும்):**

இக்காலத்தில் பெண்கள், நாடக மற்றும் திரைப்படக் கலைஞர்கள், தம் புருவங்களைத் திருத்திக் கொள்வது போன்று, அக்காலத்திலும் ஆண் பெண் இரு பாலினரும் தத்தம் புருவங்களை ஒதுக்கி வடிவாக அழகு படுத்தும் பழக்கம் நடைமுறையில் இருந்துள்ளதைக் காட்சிப்படுத்தும் பாடல்கள் பின் வருமாறு:

**"மங்கலப் பெருங் கணி வகுத்த ஓரையால்**
**மங்கல மன்னவன் வாழ்த்த ஏறலும்**
**மங்கல அச்சுதம் தெளித்து வாய் மொழி**
**மங்கலக் கருவி முன் உறுத்தி வாழ்த்தினார்"**

**-2411, இலக்கணையார் இலம்பகம், சீவக சிந்தாமணி**

மங்கல வாழ்த்து ஒலிக்க, பெருங்கணி வகுத்து உரைத்த மங்கலப் பொழுதில் சீவகன் இருக்கையில் ஏறி அமர்ந்ததும் மங்கல அட்சதை இட்டு மந்திரித்த கருவியைச் சிகை நீக்க மயிர் வினைஞன் எடுக்கவும் அனைவரும் வாழ்த்தினர்.

**"முழங்கின இன்னியம் மொய்த்தது ஏத்து ஒலி**
**கொழுங் கயல் கண்ணினார் கொண்டு பொன் அகல்**
**இழிந்தனர் திருமயிர் ஏற்ப நீரதில்**
**நிழன்றன சாமரை நிரை சங்கு ஆர்த்தவே"**

**-2412, இலக்கணையார் இலம்பகம், சீவக சிந்தாமணி**

இன்னிசை முழங்க, புகழொலி கேட்க, சாமரைகள் நிழல் தர, சங்குகள் ஆர்க்க, கயல்விழி மங்கையர் திருமயிரைப் பொன் அகலில் ஏந்தியவாறே மண்டபத்திலிருந்து இறங்கினர்.

**“பால் கடல் முளைத்த ஓர் பவளப் பூங் கொடி**
**போல் சுடர்ந்து இலங்கு ஒளிப் பொன் செய் கோதையை**
**நாள் கடி மயிர் வினை நன் பொன் தாமரைப்**
**பூக் கடி கோயிலாள் புலம்ப ஆக்கினார்”**

**-2413, இலக்கணையார் இலம்பகம், சீவக சிந்தாமணி**

பாற்கடலில் தோன்றிய பவளக்கொடி போன்ற சுடர் விட்டுத் திகழும் இலக்கணைக்கு, அவள் அழகு கண்டு பொற்றாமரை மலரில் குடிகொண்ட திருமகள் புலம்பி வருந்த, ‘மயிர்வினைக் கல்யாணம்’ நடத்தினர். ‘மயிர்வினைக் கல்யாணம்’ என்பது புருவம் ஒதுக்குதலைக் குறிக்கும்.

ஆக, பொதுவான ஆடை அணிகலன்களோடு கூடிய அலங்காரங்கள் மட்டும் இன்றி தொய்யில், புருவம் ஒதுக்குதல், போன்ற அழகிற்கு அழகு சேர்க்கும் ஒப்பனைகள் ரசனையை மேம்படுத்துகின்றன.

-------

**துணை நூற்பட்டியல்:**

1. ஐம்பெரும்காப்பியங்கள் - சீவக சிந்தாமணி - தொகுதிகள் ( 1, 2 & 3 ) - சீத்தலை சாத்தனார் - உரை - பேராசிரியர் ஸ்ரீசந்திரன் - வர்த்தமானன் பதிப்பகம்
2. ஐம்பெரும்காப்பியங்கள் - சிலப்பதிகாரம் - தொகுதி 4 - இளங்கோ அடிகள் - உரை - பேராசிரியர் ஸ்ரீசந்திரன் - வர்த்தமானன் பதிப்பகம்
3. இணையத்தளம் - https://www.tamilvu.org/en/library